ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
**திகதி** 2019.07.11

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.4 - 2019

### இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் மாற்றமின்றியிருக்கும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2019 யூலை 11ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.50 சதவீதத்திலும் 8.50 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்துள்ளது. சபையானது உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் நிதியியல் சந்தைகளிலும் அதேபோன்று உலகளாவிய பொருளாதாரத்திலும் தற்பொழுது காணப்படுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளை மிகக் கவனமாக பகுப்பாய்வு செய்தமையினைத் தொடர்ந்து இம்முடிவிற்கு வந்திருக்கிறது. நாணயச் சபையின் தீர்மானமானது பணவீக்கத்தினை விரும்பத்தக்க 4-6 சதவீத வீச்சில் பேணுவதனுடன் இசைந்து செல்வதாகக் காணப்பட்ட வேளையில் பொருளாதார வளர்ச்சி நடுத்தர காலப்பகுதியில் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை அடைவதற்கு ஆதரவளிப்பதாகவும் காணப்பட்டது.

### மென்மையான உலகளாவிய வளர்ச்சி நாணயக் கொள்கைகளில் தளர்த்தல் திருப்பமொன்றினைத் தூண்டியிருக்கிறது

அதிகரித்த வர்த்தகம் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களின் காரணமாக உலகளாவிய வளர்ச்சியில் மென்மையான தன்மை எதிர்பார்க்கப்படுகின்றமைக்கு மத்தியிலும் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களின் நாணயக் கொள்கைகள் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தளர்த்தல் தன்மையினை நோக்கி அதிகளவிற்கு மாற்றமடைந்திருக்கின்றன. தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகள் பலவும் உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு, குறைக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் மற்றும் தளம்பலுற்ற உலகளாவிய சந்தை நிலைமைகளுக்கிடையிலும் தமது நாணயக் கொள்கைகளைத் தளர்த்தியதன் மூலம் இதற்குப் பதிலிறுத்தன.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வருகிறது**

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2019இன் முதற்காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 2018இன் நான்காம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 1.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் 3.7 சதவீதத்தினால் ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை உடனடுத்து சுற்றுலாவிலும் அதனுடன் தொடர்பான பணிகளிலும் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் கூடுதலாகக் காணப்பட்ட நலிவான தன்மை அண்மைய காலத்தில் பொருளாதாரத்தினைப் பாதிக்கக்கூடியதாகவுள்ள அதேவேளையில், குறைவடைந்த உலகளாவிய வளர்ச்சி பொருளாதாரத்தின் நடுத்தர கால வளர்ச்சி வாய்ப்பில் பெரும் தாக்கமொன்றினை ஏற்படுத்தும் போல் தோற்றுகின்றது. எனினும், சுற்றுலாத் துறையிலும் அதேபோன்று ஏற்றுமதிகளின் செயலாற்றத்திலும் தற்பொழுது இடம்பெற்றுவரும் மீட்சி துறை வாரியான அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதேபோன்று ஒட்டுமொத்த இறை மற்றும் நாணயக் கொள்கைகள் என்பனவற்றின் உதவியுடன் மிக விரைவாக மீட்சியடையும் என்ற ஓரளவு நம்பிக்கையினைத் தருகிறது.

**சவால்மிக்க உலகளாவிய சூழலுக்கு மத்தியிலும் வர்த்தகப் பற்றாக்குறை குறுக்கமடைந்து வருகிறது**

இறக்குமதிகளில் காணப்படும் கடுமையான வீழ்ச்சியுடன் சேர்ந்து ஏற்றுமதிகளில் காணப்படும் தொடர்ச்சியான வளர்ச்சி 2019இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை மேலும் சுருக்கமடைவதற்கு வழிவகுத்தது. நடைமுறைக் கணக்கிற்கு ஏற்பட்ட ஏனைய உட்பாய்ச்சல்களைப் பொறுத்தவரையில், ஏப்பிறல் பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் கடுமையான பின்னடைவினைச் சந்தித்த வேளையில் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் மிதமானதாகக் காணப்பட்டன. அதேநேரம் 2019 யூனில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான வழங்கல் இலங்கையின் நடுத்தர கால வளர்ச்சி வாய்ப்புக்களின் மீது முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருப்பதனைப் பிரதிபலிப்பதாகவிருந்தது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் கிடைக்கப்பெற்றமையினைத் தொடர்ந்து, 2019 யூன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.9 பில்லியனை அடைந்தன. இது 5.1 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாக இருந்தன. வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட சுருக்கம் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகளின் கிடைப்பனவு என்பன பன்னாட்டு நாணய நிதியத்தின் தொடர்ச்சியான விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளுடன் சேர்ந்து செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை விடுவித்தமையானது 2019இல் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 4.1 சதவீதம் கொண்ட ஒன்றுசேர்ந்த உயர்வினை அடைவதற்கு வழிவகுத்தது. ரூபாவின் இவ்வுயர்வு 2018இன் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்ட கடுமையான தேய்வினை ஓரளவிற்கு சரிசெய்வதாக இருந்தது.

**தனியார் துறைக்கான கொடுகடன் 2019இன் பிற்பகுதியில் படிப்படியாக அதிகரிக்கும்**

2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த வேளையில் இக்காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த முழுமையான வீழ்ச்சியொன்று பதிவு செய்யப்பட்டது. கொடுகடன் வளர்ச்சியில் காணப்பட்ட இப்போக்கினைத் தொடர்ந்து விரிந்த பணத்தின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியும் 2019இன் இதுவரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சியுடன் 2019இன் பிற்பகுதியில் தனியார் துறைக்கான கொடுகடன் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அண்மைய எதிர்காலத்தில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் கணிசமான கீழ் நோக்கிய சீராக்கமொன்று எதிர்பார்க்கப்படுகிறது**

நாணயக் கொள்கை மற்றும் நாணய நிபந்தனைகளைத் தளர்த்துவதற்காக ஏற்கனவே எடுக்கப்பட்ட வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தை வைப்பு வீதங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குறிப்பாக, 2019 மேயில் கொள்கை வட்டி வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பு நியதி ஒதுக்கு விகிதத்தில் செய்யப்பட்ட குறைப்பினூடாக உட்பாய்ச்சப்பட்ட கணிசமான திரவத்தன்மை 2019 ஏப்பிறலில் வைப்புச் சாதனங்களின் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் விதிப்பு என்பனவற்றுடன் இணைந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், அரச பிணையங்கள் மீதான விளைவுகள், புதிய வைப்பு வீதங்கள் அதேபோன்று சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் என்பனவற்றின் மீது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. எனினும், சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதங்கள் உட்பட சந்தைக் கடன்வழங்கல் வீதங்களுக்குச் செய்யப்பட்ட நாணய நிபந்தனைகளின் அண்மைய தளர்த்தல்களின் பரிமாற்றம் இன்னமும் பூரணத்துவம் பெறவில்லை. சந்தை வட்டி வீதங்களில் தற்பொழுது இடம்பெற்றுவரும் கீழ் நோக்கிய சீராக்கம் உடனடுத்துவரும் எதிர்காலத்தில் விரைவடையும் என எதிர்பார்க்கப்படுவதனால் இது தனியார் துறையின் கொடுகடனுக்கான கேள்வி மீளெழுச்சி பெறவும் பொருளாதார நடவடிக்கை மீட்சியடையவும் உதவியளிக்கும்.

**அண்மைக் காலத்தில் உயர்வுகள் காணப்பட்டமைக்கிடையிலும் நடுத்தர கால பணவீக்கத் தோற்றப்பாடு சாதகமானதாகத் தொடர்ந்தும் காணப்பட்டது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் இரண்டும் 2019 யூனில் வீழ்ச்சியடைந்த வேளையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட அப்பணவீக்க வீதங்களும் யூனில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது. அண்மைய எதிர்காலத்தில் சில விலை அழுத்தங்கள் தோற்றம் பெற்று உயர்வடைந்த எரிபொருள் விலைகளைப் பிரதிபலிக்கக்கூடும். இது உலகளாவிய உணவுப் பண்டங்களின் விலைகளில் காத்திரமான அதிகரிப்புக்களைத் தோற்றவிக்குமென்பதுடன் மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக உள்நாட்டு உணவு விலைகளும் உயர்வடையக்கூடும். பணவீக்கத்தில் ஏற்படுகின்ற அத்தகைய உயர்வுகள் தற்காலிகமானதாக இருக்கக்கூடும் என்பதுடன் பொதுவாக பணவீக்கம் விரும்பத்தக்க வீச்சான 4-6 சதவீத வீச்சிற்குள் சிறந்த முறையில் நிலைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக பணவீக்கத்தின் மீதான கூட்டுக் கேள்வியின் அழுத்தம் கிட்டிய எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படாத அதேவேளையில், சாதகமான நடுத்தர காலப் பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கு பொருத்தமான நாணயக் கொள்கை வழிமுறைகள் ஆதரவளிக்கும்.

**கொள்கை வட்டி வீதங்கள் தற்போதைய மட்டங்களில் பேணப்படும்**

தற்போதையதும் எதிர்பார்க்கப்படுவதுமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு நாணயச் சபை, ஏற்கனவே எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களை கீழ் நோக்கிச் சீராக்குவதற்கான வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. இதற்கமைய, நாணயச் சபை, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் தற்போதைய மட்டங்களான முறையே 7.50 சதவீதத்திலும் 8.50 சதவீதத்திலும் பேணுவதற்குத் தீர்மானித்திருக்கிறது. மத்திய வங்கி

உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணிக்கும் என்பதுடன் நன்கு நிலைப்படுத்தப்பட்ட பணவீக்க மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் பின்னணியில் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்குத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகளையும் மேலும் எடுக்கும்.

**தகவல் குறிப்பு:**

பத்திரிகை மாநாடு, ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடன் 2019 யூலை 11ஆம் திகதியாகிய இன்று பி.ப. 5.00 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2019 ஓகத்து 23ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

## அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2017** | | | | **2018** | | | | | **2019** |
| | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு |
| வேளாண்மை | -2.6 | -2.0 | 7.2 | **-0.4** | 5.1 | 5.6 | 4.0 | 4.5 | **4.8** | 5.5 |
| கைத்தொழில்கள் | 4.7 | 4.7 | 4.3 | **4.1** | 1.7 | 2.8 | 3.1 | -3.6 | **0.9** | 3.0 |
| பணிகள் | 3.9 | 2.8 | 3.4 | **3.6** | 5.5 | 4.8 | 4.3 | 4.3 | **4.7** | 4.1 |
| மொ.உ.உற்பத்தி | **3.6** | **3.2** | **3.7** | **3.4** | **4.0** | **3.9** | **3.5** | **1.8** | **3.2** | **3.7** |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | திசெ 18 | சன 19 | பெப் 19 | மாச்சு 19 | ஏப் 19 | மே 19 | யூன் 19 |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 2.8 | 3.7 | 4.0 | 4.3 | 4.5 | 5.0 | 3.8 |
| | தேநுவிசு(2013=100) | 0.4 | 1.2 | 2.4 | 2.9 | 3.6 | 3.5 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.1 | 5.5 | 5.4 | 5.6 | 5.5 | 6.2 | 5.8 |
| | தேநுவிசு(2013=100) | 3.1 | 5.1 | 5.5 | 5.8 | 6.3 | 6.3 | - |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன 19 | பெப் 19 | மாச் 19 (அ) | ஏப் 19 (அ) | மே 19 | சன 19 | பெப் 19 | மாச் 19 (அ) | ஏப் 19 (அ) | மே 19 |
| ஒதுக்குப் பணம் | 949 | 963 | 963 | 924 | 849 | 2.1 | 2.7 | (3.4) | (7.6) | (12.7) |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 7,111 | 7,189 | 7,253 | 7,295 | 7,295 | 11.5 | 11.4 | 9.8 | 9.0 | 9.4 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (129) | (103) | 23 | 110 | 103 | (201.3) | (189.2) | (78.2) | (7.6) | 38.3 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 7,240 | 7,292 | 7,230 | 7,185 | 7,192 | 15.8 | 15.1 | 11.2 | 9.3 | 9.0 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,625 | 2,672 | 2,613 | 2,584 | 2,595 | 18.2 | 19.0 | 14.7 | 11.3 | 11.6 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 711 | 715 | 703 | 726 | 726 | 34.6 | 31.0 | 26.2 | 24.9 | 19.4 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,557 | 5,565 | 5,588 | 5,544 | 5,542 | 14.8 | 13.6 | 11.3 | 9.9 | 9.2 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,741 | 8,831 | 8,902 | 8,968 | 8,980 | 10.7 | 10.7 | 9.7 | 9.1 | 9.4 |

(அ) திருத்தப்பட்டது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | சன 19 முடிவில் | பெப் 19 முடிவில் | மாச் 19 முடிவில் | ஏப் 19 முடிவில் | மே 19 முடிவில் | யூன் 19 முடிவில் | 2019 யூலை 10 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00 | 8.00 | 8.00 | 8.00 | 7.50 | 7.50 | 7.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.00 | 9.00 | 9.00 | 9.00 | 8.50 | 8.50 | 8.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 9.00 | 8.96 | 8.51 | 8.49 | 7.94 | 7.86 | 7.80 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | - | 9.55 | 9.39 | 8.89 | 8.52 | 8.24 | 8.09 |
| 182-நாள் | 9.87 | 9.87 | 9.67 | 9.09 | 8.63 | 8.49 | 8.21 |
| 364-நாள் | 10.69 | 10.67 | 10.40 | 9.81 | 8.88 | 8.70 | 8.54 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வராந்தம்) | 12.27 | 12.51 | 12.23 | 12.20 | 11.82 | 11.52 | 11.13 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.44 | 14.48 | 14.49 | 14.47 | 14.48 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.41 | 14.60 | 14.56 | 14.62 | 14.59 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.85 | 8.88 | 8.98 | 8.97 | 9.00 | 8.94 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.91 | 10.96 | 11.11 | 11.15 | 11.19 | 11.07 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.21 | 11.13 | 11.42 | 11.24 | 10.05 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*